வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 07.03.2026 சனிக்கிழமை | இதழ் : 61 | பக்கங்கள் : 08

# பாலைதீவு பயணித்த படகு குருநகர் கடலில் கவிழ்ந்தது!

## இருவர் பலி : 12 பேர் காயம் !!



யாழ்ப்பாணம், மார்ச் 07.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தை அண்மித்த பாலை தீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத் திருவிழாவுக்காக, யாழ்ப்பாணம் குருநகர் படகுத்துறையில் இருந்து சென்ற படகொன்று கவிழ்ந்ததில் இருவர் பலியாகியுள்ளதுடன், 12 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற் றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயத் திருவிழாவைக் காண்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 20 இற்கும் மேற்பட்டோர் குருநகர் படகுத் துறையிலிருந்து புறப்பட்டுள்ளனர். புறப் பட்ட சிறிது நேரத்திலேயே படகு விபத்துக்குள் ளாகிக் கடலில் கவிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

படகு கவிழந்ததனால், அதில் பயணித்த அனைவரும் கடலில் விழுந்துள்ளனர்.

07

# அவசரகாலச் சட்டம் நிறைவேற்றம்

கொழும்பு, மார்ச் 07.

அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரே ரணை 100 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற் றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்கு களும் எதிராக 08 வாக்குகளும் மட்டுமே

07

# குருநகர் படகு விபத்து தொடர்பில் உடனடி விசாரணைக்குப் பணிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச். 07

யாழ்ப்பாணம் - குருநகர் கடற்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற படகு விபத்துத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு விபத்துக்கான முழு மையான காரணங்களைக் கண்டறியுமாறு சம்பந்த ப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங் கம் சந்திரசேகர் பணித்துள்ளார்.

இது தொடர்பாக, யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கடற் படையினருடன் அமைச்சர் நேற்று அவசர கலந் துரை யாடலை மேற்கொண்டார். விபத்துக்குள்ளான படகு பயணத்திற்கு பாதுகாப்பான நிலையில்

07

# மக்கள் குரலை ஒடுக்கவே அவசரகால சட்டம் நீடிப்பு!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் குரலை ஒடுக்கவே அரசாங்கம் அவசர கால சட்டத்தை நீடித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது.

07

# எந்தவொரு நாட்டுக்கும் எதிராகவோ, சார்பாகவோ எம் நிலம், நீர், ஆகாயத்தை பயன்படுத்த இடமில்லை!

## சபையில் அறிவித்தார் நீதி அமைச்சர் ஹர்ஷண



கொழும்பு, மார்ச் 07

எந்தவொரு நாட்டுக் கும் சார்பாகவோ அல்லது மற்றொருவருக்கு தீங்கு விளைவிப்பதற்காகவோ எமது நிலத்தையோ, ஆகாயத்தையோ அல்லது நீரையோ பயன்படுத்த நாம் அனுமதிக்கப் போவ தில்லை என நீதி அமைச்சர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரம ரத்ன தலைமையில் கூடி யது. இதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.

07

# எரிபொருள் நெருக்கடிக்கு புதிய செயலி யாழ். இந்து மாணவனின் கண்டுபிடிப்பு!



யாழ்ப்பாணம், மார்ச். 07

மத்திய கிழக்கில் எழுந்த மோதல் சூழ்நிலையை அடுத்து வடக்கில் எரிபொருள் விநியோ கத்தில் எழுந்த நெருக்கடியை எதிர்கொள்ளத்தக்கதாக யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மாண வன் ஒருவர் புதிய செயலி ஒன்றினை அறிமுகம்

07

# அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் தேவையின்றி பயன்படுத்தவில்லை!

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 07

அரசாங்கம் அவசரகால சட்டத்தை தேவையற்ற விதத்தில் பயன்படுத்தவில்லை என பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக் ரமர த்ன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

07

# எதிர்வரவுள்ள வாரங்கள் நாட்டுக்கு தீர்க்கமானவை!

## சபையில் அரசு முன்னறிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் இராணுவ பதற்ற ங்கள் காரணமாக, எதிர்வரும் வாரங்கள் எமது நாட்டு க்கு ஒரு தீர்க்கமான காலகட்டமாக இருக்கக்கூடும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜய சேகர நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில்

07

# அடக்குமுறை எங்கே நடந்தது? ஆதாரத்துடன் முன்வையுங்கள்!

## எதிர்க்கட்சிக்கு பிரதமர் சவால்

கொழும்பு, மார்ச் 07

அவசரகாலச் சட்டத்தின் ஊடாக நாட்டில் இடம் பெற்ற அடக்குமுறைச் சம்பவத்தை வெளிப்படுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரம ரத்ன தலைமையில் கூடியது. இதன் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

பருவ கால மழை மற்றும் கப்பல் பராமரிப்பு பணிக ளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் இந்தியா நாகப்பட்டினம் இடையேயான பயணிகள் கப்பல் சேவை, நேற்று மீண் டும் ஆரம்பமானது.

தமிழ்நாடு நாகப்பட்டினத்தில் இருந்து நேற்று காலை 9.30 மணிக்கு, 77 பயணிகளுடன் புறப் பட்ட சிவகங்கை பயணிகள் கப்பல்,

07

# மத்திய கிழக்கு போர் குறித்து பக்கச்சார்பின்றி செயற்படுக!

## மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 07

மத்திய கிழக்கு போர் சூழலில் பக்கச்சார்பின்றி செயற்படுவதே அவசியமான விடயம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர கால சட்டம் அமுலில் இருந்தபோது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நுழைந்ததா?

## சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 07

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நுழைந்ததா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போதே அவர் இந்த கேள்வியை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று வந்திருந்தது என்பது உங்களுக்குத் தெரியாதா? "ஐரிஸ் டேனா" எனப்படும் ஒரு போர்க் கப்பல் - அது ஒரு "மௌட்ஜ்



ரக" போர்க்கப்பல் - அதன் மீது நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றிலிருந்து "மார்க் 48" ரக பாரிய டார்பிட்டோ ஏவுகணை ஒன்று ஏவப்பட்டது.

தேசிய பாதுகாப்பு மிகவும் உச்சத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஒரு தருணத்தில், எமது நாட்டின் நிலப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் வரும் போது, அதைக் கண்டறிய எம்மிடம் மேற்பரப்பு ராடர் இல்லையா? சோனோபாய்ஸ் இல்லையா? நீருக்கடியிலான சோனார் வலையமைப்புகள் இல்லையா? இழுத்துச் செல்லப்படும் சோனார் கருவிகள் இல்லையா? செயற்கைக்கோள் கண்காணிப்பு வசதிகள் இல்லையா?.

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, தேசிய பாதுகாப்பு மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஒரு நிலையில்தான் எமது பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதிலிருந்தே எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள கதியை நாம் புரிந்துகொள்ளலாம்-என்றார்.

(அ)

# இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.மீனவர்களை விடுவிக்க உதவுக!

## உறவினர்கள் உருக்கமான கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 07

இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம்-வலிகாமம் வடக்கு ஊரணி பகுதி மீனவர்கள் இருவரையும் பாதுகாப்பாக நாட்டுக்கு கொண்டு வருவதற்கும் அவர்களின் தொழில் உபகரணங்களை அவர்களிடம் வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினார்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மீனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற நிலையில் இயந்திர கோளாறு காரணமாக படகு செயலிழந்து ஆறு நாட்களுக்கு மேலாக குடும்பத்தினருடன் அவர்களின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில், நேற்று முன் தினம் இந்தியாவில் கரை ஒதுங்கினர். அவர்கள் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கும் அவர்களின் வாழ்வாதாரப் படகு மற்றும் வலைகளை அவர்களிடமே ஒப்படைப்பதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# தகுதியற்ற சமாதான நீதவான்களுக்கு எதிராக அரசு விரைவில் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் முறையான தகுதிகள் இன்றி அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட சமாதான நீதவான்களின் பதவிகளை மறு பரிசீலனை செய்ய நீதி அமைச்சு தீர்மானித்துள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றில் சமாதான நீதவான் நியமனம் என்பது அரசியல் நியமனமாக மாறியுள்ளது. சில அரசியல்வாதிகள் தொழிலொன்றை பெற்றுக்கொடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் சமாதான நீதவான் பதிவியை வழங்கி அந்த நபர்களை திருப்திப்படுத்தினர்.

நாட்டில் தற்போது சுமார் ஒரு இலட்சம் சமாதான நீதவான்கள் உள்ளனர். இவர்களின் தகுதிகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து மீண்டும் ஆராயப்படவுள்ளது. ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒருமுறை சமாதான நீதவான்களின் விபரங்களைப் புதுப்பிக்கும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகங்களின் உறுதிப்படுத்தல் மூலம் மட்டுமே இனி இவர்களின் பதவிக்காலம் நீடிக்கப்படும். சமாதான நீதவான்களின் விவரங்களை உள்ளடக்கிய புதிய மின்னணு தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் எந்தவொரு முத்திரையையும் இட்டவர் உண்மையான சமாதான நீதவான்தானா என்பதை உடனடியாக சரி பார்க்க முடியும்-என்றார். (அ)

# கொழும்பில் காற்றுமாசு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 07

கொழும்பு நகரின் வளிமண்டலத்தில் மாசடைவு மட்டம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ள நிலையில், இது பொது மக்களின் ஆரோக்கியத்தில், குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பின் மத்திய பகுதியில் வளிமண்டலத் தரச் சுட்டெண் 144 ஆகப் பதிவாகியுள்ளது. இது உணர்திறன் மிக்க தரப்பினருக்கு ஆரோக்கியமற்றது எனவும், பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை அறிகுறி எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட குழந்தை நல மருத்துவ நிபுணர் டாக்டர் மகேஷக விஜயவர்தன, வளிமாசுபாட்டினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நிலையில் சிறுவர்கள் இருப்பதாக எச்சரித்துள்ளார்.

வளிமாசு மட்டம் உயர்வாகக் காணப்படும் வேளைகளில், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஆஸ்துமா அல்லது இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்புறச் செயலபாடுகளைத் தவிர்க்குமாறு டாக்டர் விஜயவர்தன அறிவுறுத்தியுள்ளார்.

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 07

மார்ச் மாதத்திற்கான லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்திலும் எரிவாயு விலையில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் 3,690 ரூபாவுக்கும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் 1,482 ரூபாவுக்கும், 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் 694 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

# மின்சார சபையின் பொறுப்புக்களை மறுசீரமைத்து வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மார்ச் 07

இலங்கை மின்சார சபையின் பணிகள் மற்றும் பொறுப்புகளை மறுசீரமைத்து, எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 09 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின்படி, மின் உற்பத்தி, கடத்தல், விநியோகம் மற்றும் அமைப்பு இயக்கங்களுக்காக ஆறு புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பல உப பிரிவுகள் திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

(அ)

# ஜனவரியில் இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் சரிவு!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையின் ஆடை ஏற்றுமதி 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் கடந்த ஆண்டைவிட 2.66 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி, 2025 ஆம் ஆண்டு ஜனவரியில் 437. 7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வருமானம் 425.44 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது.

இது முக்கிய ஏற்றுமதி சந்தைகளில் நிலவும் தொடர்ச்சியான நெருக்கடியை பிரதிபலிக்கிறது.

அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2.73 வீதம் வீழ்ச்சியடைந்து 165.11 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான (பிரித்தானியா தவிர்ந்த) ஏற்றுமதி 1.93 வீதம் குறைந்து 126.99 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது. பிரித்தானிய சந்தை ஸ்திரமான நிலையைப் பேணி வருவதுடன், அது 0.23 வீதம் எனும் சிறிய வளர்ச்சியு டன் 61.71 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது.

ஏனைய சந்தைகளுக்கான ஏற்றுமதி 6.07 வீதத்தால் சரிவ டைந்து 71.63 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது.

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 07

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01. 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திராவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். பரிசில்களை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் திருமதி சிவரஞ்சினி தெய்வேந்திரா வழங்கி வைப்பார். (எ-02)

# சீனப் பிரஜை கைது!

கொழும்பு, மார்ச் 07

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பகுதியில் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட விசேட சோதனையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 1,500 சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர் 39 வயதுடைய சீன நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 07.03.2026 சனிக்கிழமை ඊළනාඩු
விசுவாவசு வருடம், மாசி 23

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் வரவேற்கத்தக்க முயற்சிகள்

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன் முறைகளை அரசாங்கம் முன்னெடுக்கும்போது இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வைக்காண்பதற்கு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற. உறுப்பினர்களுடனும் அந்த கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் ஒன்றை நடத்திய தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை முக்கியமான விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டதாக அறிவித்திருக்கிறது.

இணக்கப்பாட்டுக்கு அமைவாக பேரவைக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் புதிய அரசியலமைப்பு தொடர்பான செயற்பாடுகள் பல கட்டங்களாக முன்னெடுக்கப்படும் என்று பேரவையின் ஒருங்கிணைப் பாளர்கள் ஏழு பேர் கைச்சாத்திட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கை கூறுகிறது.

இனப்பிரச்னைக்கு நிலையான தீர்வை எட்டும் நோக்கில் தமிழ் மக்களின் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை போன்ற அபிலாசைகளை உள்ள டக்கிய சுயாட்சி (சமஷ்டி ) முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பு ஒன்றே அவசியம் என்ற பொதுத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் செய்துகொள்வதற்கான சமூக ஒப்பந்த வரைவு ஒன்றைத் தயாரித்தல்

புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய சுயாட்சி ஏற்பாட்டுக் கான அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய விரிவான அரசியலமைப்பு வரைவு ஒன்றைத் தயாரித்தல்: இவையே பேரவையின் முறற்சிகளின் பிரதான நோக்கங்களாகும்.

கடந்த வாரம் கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவற்றின் பிரதிநிதிகளும் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்களில் தொடர்ந்து ஒன்றாகச் செயற்படுவது என்றும் இனப்பிரச்னை தொடர்பிலான விடயங்களிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசாங்கம் ஏற்பாடு செய்யக்கூடிய எந்தவொரு கலந்துரையாட லிலும் தனியாகவும் கட்சி அடிப்படையிலும் இனிமேல் செயற்படுவதில்லை என்றும் உடன்பாடு காணப்பட்டதாகவும் பேரவையின் அறிக்கை கூறுகிறது.

சுயாட்சி அடிப்படையில் இனப்பிரச்னைக்கு நிலையான தீர்வைக் காணவேண்டும் என்பதில் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் வேறுபாடு கிடையாது. அந்த கட்சிகள் தங்களது நிலைப்பாட்டை ஒன்றி ணைந்து முன்வைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. ஆனால், அத்தகைய ஒன்றிணைந்த அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதில் இது நாள் வரை தமிழ்க் கட்சிகளின் தலைவர்களினால் இயலாமல் இருக்கிறது என்பது உலகத்துக்கு தெரியும்.

இத்தகைய பின்புலத்தில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. அரசியல் தீர்வு மற்றும் அரசியலமைப்பு வரைவு விடயங்களில் தனித்தனியாகவும் கட்சி அடிப்படையிலும் இனிமேல் செயற்படுவதில்லை என்ற உடன்பாட்டில் இருந்து எந்தவொரு தமிழ்க் கட்சியும் விலகாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய வல்லமை பேரவைக்கு இருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

புதிய அரசியலமைப்பை அரசாங்கம் கொண்டு வருமோ இல்லையோ அது வேறுவிடயம். ஆனால், தற்போதைய அரசியலமைப்பில் இருக்கும் மாகாண சபைகள் முறையை பாதுகாக்காமல் சுயாட்சி அடிப்படையிலான தீர்வுக்கான முயற்சிகளை ஒரு வெற்றிடத்தில் இருந்து தொடங்க முடியாது என்பதை பேரவையும் தமிழ்க் கட்சிகளும் உணர்ந்து நடைமுறைச் சாத்தியமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்தால் பேரவையின் முயற்சிகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருக்கும்.

# பெண்களின் உழைப்பை மதிக்கும் நியாயமான சமூகம் மிக அவசியம்

## பிரதமர் ஹரிணி வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச். 07

பெண்களின் உழைப்பை மதிக்கும் ஒரு நியாயமான சமூகத்தையும், பாதுகாப் பான பொருளாதாரத்துக் கான தேசிய பராமரிப்புக் கொள்கையினையும் நிறுவு தல் மிகவும் அவசியமாகும் என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தி னால் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் முன்வைக் கப்பட்ட “தேசிய பராமரிப் புக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டும்” என்ற பிரேரணை மீதான விவாதத் தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகை யில்,

“சர்வதேச மகளிர் தின த்தை முன்னிட்டு, பாராளு மன்ற பெண் உறுப்பினர்க ளின் ஒன்றியத்தினால் தேசிய பராமரிப்புக் கொள்கையொ ன்றை பரிந்துரைத்து சமர்ப் பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணை குறித்து உரையா ற்றக் கிடைத்தமையையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சிய டைகிறேன். குறிப்பாக, ஆறு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் எனது கன்னி உரையை நிகழ்த்திய போது, “பராமரிப்பு பொருளாதாரம்” பற்றி நான் பேசிய வேளையில், இச்சபை யில் மிகக் குறைந்த எண்ணிக் கையிலான பெண் உறுப்பி னர்களே இருந்தனர். அன்று அந்தத் தலைப்பை பற்றிப் பேசுவதே ஒரு புதிய விடய மாகக் கருதப்பட்டது.” - என்றார். (எ)

# 500 லீற்றர் மண்ணெண்ணெய் பருத்தித்துறையில் பறிமுதல்!

## சாரதி பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 07

பதுக்கல் மற்றும் கள்ள சந்தையில் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட

சுமார் 500 லீற்றர் மண்ணெண் ணெய், அதனை கொண்டுசென்ற வாகனம் என்பன பறிமுதல் செய்யப் பட்டன. இதன்போது, வாகனத்தை செலுத்திய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினரால் நேற்றுக்காலை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு, கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் எரிபொருள் என்பனவற்றுடன் வாகன சாரதியை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# ஜோன்ஸ்டன் உட்பட மூவருக்கு எதிரான வழக்கு மார்ச் 18 இல்!

கொழும்பு, மார்ச் 07

வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், சதொச நிறுவனத்தின் ஊழி யர்களை அவர்களின் கடமை களிலிருந்து விடுவித்து, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அர சாங்கத்துக்கு நட்டம் ஏற்ப டுத்தியதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ள முன்னாள் அமைச் சர் ஜோன்ஸ்டன் பெர்னா ண்டோ உள்ளிட்ட மூவரு க்கு எதிரான வழக்கை, மேலதிக சாட்சி விசாரணை களுக்காக எதிர்வரும் 18ஆம் திகதி அழைக்குமாறு கொழு ம்பு மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.


நேற்று வெள்ளிக்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி மொஹமட் மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிறிதொரு வழக்குச் சம்பவம் தொடர் பில் விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மொஹமட் சாகிர் ஆகிய இரு பிரதிவாதிகளும் சிறைச்சாலை அதிகாரிகளி னால் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்டனர்.

முன்வைக்கப்பட்ட சாட் சியங்களை கருத்திற் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கின் மேல திக விசாரணைகளை மார்ச்18ஆம் திகதி வரை ஒத்திவைப்ப தாக அறிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மிதுனம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**

கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்யோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும்.

**தனுசு**

குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**மகரம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும்.

**கும்பம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒருகாரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டிவரும். மறைமுக விமர் சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

# வவுனியாவில் 25ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை ஆரம்பம்

வவுனியா, மார்ச். 07

வவுனியாவில் 25 ஆயிரத்து 411 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. விமலரூபன் தெரிவித்தார்.

பருவகால மழை மற்றும் கடந்த வருட இறுதிகளில் ஏற்பட்ட டித்வா புயலுடனான, அதிக வெள்ளப்பெருக்கு, காரணமாகவும், இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாகவும் வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் அதன் கொள்ளளவினை எட்டியுள்ளன.

இதன் காரணமாக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறு போக அளவினை விட இம்முறை நான்காயிரம் ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த பெரும் போக நெற் செய்கையில் 47, 045 ஏக்கரில் அறுவடை செய்யப்பட்டதுடன், இதன் மூலமாக 64, 645. 54 மெட்ரிக் தொன் நெல் பெறப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

(எ-10)

## இரணைமடுக்குளத்தின் கீழ் 21,160 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை

கிளிநொச்சி, மார்ச். 07

இரணைமடுக்குளத்தின் கீழ் இம்முறை 21, 160 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தின் 2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் கே. பிரகாஸ், கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர், மாவட்டத்திலுள்ள விவசாயத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளன பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எ)

## யாழில் கசிப்புடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மார்ச். 07

10 லீற்றர் கசிப்புடன் ஆறுகால் மடத்தை சேர்ந்த 28 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ-03)

## போதைப்பொருட்களுடன் 10 பேர் கைது கைதாகினர்

யாழ்ப்பாணம், மார்ச். 07

கடந்த சில நாட்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பலர் பல்வேறு போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கசிப்பு, கஞ்சா மற்றும் ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டவேளை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-05)

## சுன்னாகத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர் தடம்புரள்வு

யாழ்ப்பாணம், மார்ச். 07

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்று சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சபாபதிப்பிள்ளை வீதியில் தடம்புரண்டது. நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த நிலையில், டிப்பர் சாரதி சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

# குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையில் சாதனையாளர்கள் கௌரவிப்பு





யாழ்ப்பாணம், மார்ச். 07

கடந்த வருடம் குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையில் இருந்து தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் வெற்றி பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் திருமதி நளாயினி சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கல்வி அமைச்சின் [illegible] விஞ்ஞான வளர்ச்சி முன்னேற்ற சங்கமமும் இணைந்து நடத்திய இளம் விவசாய விஞ்ஞானி போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவி க. நதீனா மற்றும் மாகாண மட்ட விசேட தேவையுடைய மாணவர் தடகளப் போட்டியில் 100 மீற்றர், 80 மீற்றர் ஓட்டப்போட்டிகளிலும் நீளம் பாய்தல் என்பனவற்றில் வெற்றி பெற்ற செ. பவித்ரா ஆகிய மாணவிகள் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வெ. அரசகேசரி, வலிகாமம் கல்வி வலய விவசாய பாட ஆசிரிய ஆலோசகர் ப. அருந்தவம், யாழ்ப்பாணம் களக்கற்கைகள் நிலைய முகாமையாளர் ஆ. கோகுலராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள ஆணைக்குழுவை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பு

## பிரதமர் ஹரிணி சபையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 07

அதிபர் சேவை மற்றும் அரச சேவையின் பல துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காக, இந்த ஆண்டில் சம்பள ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இந்த ஆணைக்குழு ஊடாக அரச சேவையின் சம்பள முரண்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை வழங்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதிபர் சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகள் குறித்து அதிபர் சங்கங்கள் மற்றும் அதிபர்களுடன் நாம் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

இந்த முரண்பாடு தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து ஒரு தீர்வைப் பெறுவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம்.

அரசாங்கத்தின் கொள்கையின்படி, இந்த ஆண்டு சம்பள ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இதன் மூலமாகவே எம்மால் நிலையான தீர்வை வழங்க முடியும் என்றும் அவர் கூறினார். (எ)

# எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது

## அசேல சம்பத் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச். 07

நாட்டின் தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடுகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை. ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் உண்மையான நிலையை மறைப்பதாகவே அமைந்துள்ளன என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய நுகர்வோர் முன்னணி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், “கடந்த காலங்களில் மக்கள் எரிவாயுவுக்காக நீண்ட வரிசைகளில் நின்றனர். புதிதாக திருமணம் செய்யும் தம்பதியினர் கூட ஒரு எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்ள அடகுக்கடைக்கு செல்லும் நிலையே காணப்பட்டது. தற்போது ஜனாதிபதி ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விடுவிப்பதாகக் கூறுகிறார். இதனை நாம் வரவேற்கிறோம். ஆனால், இந்த முடிவை அவர் முன்னரே எடுத்திருக்க வேண்டும்.

அதேநேரம், தற்போது சந்தைக்கு வரும் சிலிண்டர்களில் எரிவாயுவின் அளவு குறைவாக இருப்பதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனை உறுதிப்படுத்த நாம் வரும் நாட்களில் தராசுகளைப் பயன்படுத்தி சிலிண்டர்களின் வெற்று எடை மற்றும் எரிவாயுவின் எடையை அளவிட்டு நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக நிரூபிப்போம். லாப்ஸ் போன்ற நிறுவனங்கள் தமது இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் சரியான விலையில் தரமான சேவையை வழங்க வேண்டும்.”- என்றார். (எ)

# புத்தளத்தில் கோர விபத்து மாணவர்கள் இருவர் பலி!

புத்தளம், மார்ச். 07

புத்தளம்- கடயமோட்டை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

மாணவர்கள் வீதியில் சென்றுகொண்டிருந்த போது லொறி ஒன்று மோதியதால் இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே மாணவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் பிறிதொரு மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடயமோட்டை சிங்கள மகா வித்தியாலயத்தில் 03 ஆம் தரத்தில் கல்வி கற்ற 8 வயது சஞ்சன மற்றும் அதே பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்ற 12 வயது திலிப் மதுசங்க என்ற மாணவனுமே இந்த விபத்தில் பலியாகினர். (எ)

# “அமெரிக்காவை கண்டிக்க அரசாங்கம் அச்சப்படுகிறது”

கொழும்பு, மார்ச். 07

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் சட்டவிரோத நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை கண் இருந்தும் குருடர் போன்று பார்த்துக்கொண்டிருக்கிறது.

அதேபோன்று ஈரான் மீது தாக்குதல் நடத்தி அதன் ஆன்மிக தலைவரை கொலை செய்த அமெரிக்காவை கண்டிப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் அச்சப்படுவதையிட்டு முஸ்லிம் சமூகம் கவலையடைகிறது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# பிரதமர் தலைமையில் சர்வதேச மகளிர் தினம்

கொழும்பு, மார்ச். 07

சர்வதேச மகளிர் தினம் நாளை 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் மாத்தறையில் நடைபெறவுள்ளது. அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். பெண்கள் வெறும் வாக்காளர்களாக மட்டும் இருக்காமல், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொண்டு சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆளுமை செலுத்த முன்வர வேண்டும் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# கிணற்றில் விழுந்த யானையும் குட்டியும் பாதுகாப்பாக மீட்பு

பொலநறுவை, மார்ச். 07

வெலிகந்த, சிங்கபுரவில் உள்ள விவசாய நிலப்பகுதியில் கைவிடப்பட்ட கிணற்றில் விழுந்த யானையும் அதன் குட்டியும் நேற்றுக்காலை பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

இவ்வாறு, மீட்கப்பட்ட யானைகள் திருகோணமடு வன விலங்கு காப்பகத்தில் விடப்பட்டன.

பெண் யானைக்கு சுமார் 20 வயது எனவும், அதன் குட்டிக்கு 03 வயது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் தேடி கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைக் கூட்டத்தைச் சேர்ந்த இந்த யானையும் குட்டியும் எதிர்பாராதவிதமாக அங்குள்ள பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்தன.

இந்த நிலையில், கிணற்றுக்குள் தத்தளித்துக் கொண்டிருந்த யானைகளை வெலிகந்த வன விலங்கு காப்பாளர் ஏ. வனசிங்கவின் தலைமையில் அதிகாரிகள் குழு ஜே.பி.சி. இயந்திரம் மூலம் பாதுகாப்பாக மீட்டது.

# குஷ், ஹஷீஸ் போதைகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 07

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 11 கிலோ கிராம் குஷ் மற்றும் ஹஷீஸ் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 6 கிலோ 590 கிராம் குஷ் மற்றும் 4 கிலோ 910 கிராம் ஹஷீஸ் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் மீண்டும் தலைதூக்கும் டெங்கு!

## இதுவரை 18 பேர் பாதிப்பு

மட்டக்களப்பு, மார்ச். 07

மட்டக்களப்பு நகர் பகுதியில் டெங்கு மற்றும் சிக்கன் குனியா நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதால், பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதார பிரிவினர் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில வாரங்களாக பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக இந்த நோய்த் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

இதில், கொக்குவில் பகுதியில் 12 பேரும், கோட்டமுனை பகுதியில் 6 பேரும் என மொத்தம் 18 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்குடன் இணைந்து சிக்கன் குனியா நோய்த் தாக்கமும் இப்பகுதிகளில் பதிவாகி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 3 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி இ. உதயகுமார் தலைமையில் விசேட சோதனையிடல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், மாநகர சபை ஊழியர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பினர் ஒன்றிணைந்து வீடுகளைச் சோதனையிட்டனர். (எ)

# மீன்பிடி படகு மூழ்கியது சாய்ந்தமருதில் சோகம்



சாய்ந்தமருது, மார்ச். 07

இயந்திரம் மற்றும் வலைகளுடன் நங்கூரமிட்டிருந்த பாரிய ஆழ்கடல் மீன்பிடிப் படகு ஒன்று கடலில் மூழ்கிய சம்பவம் சாய்ந்தமருது பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்துக்குட்பட்ட சாய்ந்தமருது கடல் பகு தியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய இயந்திரப் படகு, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுடன் கடலில் மூழ்கியது.

கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் மூழ்கிய இந்தப் படகினை மீட்கும் முயற்சியில் மீனவர்களும் பொதுமக்களும் ஈடுபட்டனர்.

கனரக வாகனங்கள் மூலம் படகை கரைக்கு இழுக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், கடற்படையினரின் உதவியை பெறவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

பெண் உடல் துஷ்பிரயோகம்:

# "குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை வேண்டும்"

கொழும்பு, மார்ச். 07

நுவரெலியாவில் மருத்துவமனை பிரேத அறையில் இருந்த பெண்ணின் உடல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சம்பவம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "இப்போது மகளிர் விடயங்கள் தொடர்பில் நாங்கள் கதைக்கின்ற போது விடுமுறை இன்றி, சம்பளம் இன்றி 24 மணிநேரமும் பணியாற்றும் பெண்கள் வீடுகளில் உள்ளனர். இவர்களுக்காக நலன்புரிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாட்டில் பெண்களின் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைத் திட்டத்தை இந்த வருடத்தில் செயல்படுத்துமாறு கோருகின்றோம்."- என்றார். (எ)

# சிறுமியை வன்புணர்ந்த மாமாவுக்கு கடூழிய சிறை

மட்டக்களப்பு, மார்ச். 07

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த குற்றவாளிக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி, தனது சகோதரியின் மகளான 14 வயது சிறுமியை, 55 வயதுடைய நபர் பாலியல் வன்புணர்வு செய்துள்ளார்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீண்ட காலமாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் குறித்த நபர் குற்றவாளியாக உறுதி செய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டணையும் 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (எ)

# இளம்பெண் உடல் துஷ்பிரயோகம்: அரசு கவனம் செலுத்த வேண்டும்

கொழும்பு, மார்ச். 07

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச மருத்துவமனையொன்றில் உயிரிழந்த இளம் பெண்ணின் உடல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மகளிர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தால் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் பாதிப்பு

## கொழுந்து விலையிலும் சரிவு

நுவரெலியா, மார்ச். 07

மத்திய கிழக்கு பகுதியில் நிலவி வரும் போர் பதற்றத்தின் எதிரொலியாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பாதிப்பை எதிர்நோக்கி வருவதுடன், தேயிலைக் கொழுந்துகளுக்கான விலையிலும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே கூறுகையில்,

இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் சுமார் 52 சதவீதமானவை மத்திய கிழக்கு மற்றும் தென்னாபிரிக்க நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நாட்டில் மொத்த வருடாந்த தேயிலை உற்பத்தி 2 இலட்சத்து 56,000 மெட்ரிக் தொன்களாக இருக்கும் நிலையில், அதில் ஓர் இலட்சத்து 28, 000 மெட்ரிக் தொன் தேயிலை மேற்படி நாடுகளால் கொள்வனவு செய்ய முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி 65 சதவீதத்தை பங்களிக்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இந்த வீழ்ச்சியால் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாவார்கள் என்றும் அவர் கூறினார்.(எ)

# போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது

நுவரெலியா, மார்ச். 07

சிவனொளிபாதமலை யாத்திரைக்காக சென்ற இரு இளைஞர்கள், "ஹேஸ" என அழைக்கப்படும் போதைப்பொருளுடன் மஸ்கெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மஸ்கெலியா பொலிஸார் மவுஸ்சாகலை நீர்த்தேக்கப் பகுதியில் விசேட வீதித் தடையை ஏற்படுத்தி, யாத்திரிகர்களின் வாகனங்களை சோதனையிட்டனர். இதன்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த இரு இளைஞர்களிடமிருந்து போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் மாத்தளை, உக்குவலை பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 20 வயதுடையவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இவர்களிடமிருந்து 35 மில்லிகிராம் "ஹேஸ்" போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முன்தினம் மாலை ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# இரண்டு கிலோ கஞ்சாவுடன் கல்விசாரா ஊழியர் கைது!

நுவரெலியா, மார்ச். 07

புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யுதகனாவ பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது, இரண்டு கிலோ உலர்ந்த கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தல விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் குறித்த சோதனை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் வெல்லவாய, மஹா ஆரகம பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விசாரா ஊழியராக கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கஞ்சா தொகையுடன் பயணித்துக்கொண்டிருந்த போதே அதிரடிப்படையினரிடம் சிக்கியுள்ளார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலைதீவு...

கடலில் விழுந்தவர்களை அப்பகுதியில் நின்ற கடற்றொழிலாளர்களும், சிறிது நேரத்தின் பின்னர் அவ்விடத்துக்கு வந்த கடற்படையினருமாகக் காப்பாற்றிக் கரை சேர்த்ததுடன், காயமடைந்தவர்களை நோயாளர் காவு வண்டியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் 12 வயது சிறுவன் ஒருவன், 5 பெண்கள், 8 ஆண்கள் அடங்குவதாகவும், இருவரின் நிலை மோசமாகக் காணப்படுவதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி நேற்று மாலை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மீட்கப்பட்டவர்களில் இருவர் வைத்தியசாலையில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. குருநகர் பகுதியை சேர்ந்த 80 வயதுடைய எம்.ஜோசப் மற்றும் 57 வயதுடைய எஸ். பிரான்ஸிஸ் ஆகியோரே உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் மரண விசாரணைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

படகு புறப்பட்ட வேளையில் படகில் இருந்தவர்களின் எண்ணிக்கை உறுதியாகத் தெரியாத காரணத்தினால் நேற்று மாலை வரை கடற்படைச் சுழியோடிகளின் உதவியுடன் தேடுதல் தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலீசாரும், கடற்படையினரும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ -05)

## குருநகர் படகு...

இருந்ததா, பயணிகளின் எண்ணிக்கை விதிமுறைகளுக்கு உட்பட் டதா, கடல் பயணத்திற்கான பாதுகாப்பு நடைமுறை கள் முறையாக பின்பற்றப்பட்டனவா என்பன குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்ட அமைச்சர்,

படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தனது அனுதாபத்தை தெரிவித்ததோடு, துயரத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு அரசாங்கம் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேநேரம், யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களின் நிலைமை தொடர்பில் கேட்டறிந்தார் என்றுகடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-05)

## அவசரகால...

கிடைத்தன.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 81ஆவது பிரிவின் கீழ் உள்ள பிரேரணை 100 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் ஜகத் விக்ரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.(அ)

## எந்தவொரு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் என்ன சொன்னார்கள்? இவர்களுக்கு சர்வதேச உறவுகள் இல்லை, ஒரு பெட்டிக்கடையைக் கூட நடத்தத் தெரியாது என்று சொன்னார்கள். நான் இதை அடிக்கடி சொல்கிறேன், சர்வதேச நாணய நிதியமும் நாட்டை விட்டு வெளியேறும் என்று கூறினார்கள்.

எமது ஜனாதிபதியின் இராஜதந்திரத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை. சர்வதேச சமூகம் எமது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை இப்போது அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மோதல் முழு உலகையும் பாதிக்கும் ஒன்று என்பது நமக்குத் தெரியும். அதேபோல், எந்த நாட்டில் எங்கு போர் நடந்தாலும் பாதிப்பு மனித உயிர்களுக்குத்தான். அதனால்தான் எமது வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியும் கூடிய விரைவில் அமைதியை ஏற்படுத்துமாறு எப்போதும் கோரிக்கை விடுக்கின்றனர்.

சிறிய நாடாக இருந்தாலும், எமது அரசாங்கத்தின் தன்னம்பிக்கையும் எமது மனச்சாட்சியும் மிகப்பெரியது. உலகில் எந்தவொரு மனிதனும் எந்தக் காரணத்திற்காகவும் இறப்பதை நாம் விரும்பவில்லை.

அதேபோல், சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச சாசனங்களின்படி நாம் எப்போதும் நடுநிலையாகச் செயற்படும் ஒரு நாடு.

எந்தவொரு நாட்டுக்கும் சார்பாகவோ அல்லது மற்றொருவருக்கு தீங்கு விளைவிப்பதற்காகவோ எமது நிலத்தையோ, ஆகாயத்தையோ அல்லது நீரையும் பயன்படுத்த நாம் அனுமதிக்கமாட்டோம். நாம் நடுநிலையானவர்கள், அதே சமயம் மனிதாபிமானம் மிக்கவர்கள்-என்றார். (அ)

## மக்கள்...

இதன்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் உரிமைகளை அடக்குமுறைக்கு உட்படுத்தும் பின்னணி நோக்கமே இதனுள் காணப்படுகின்றது.

அவசரகால சட்டத்தை நீடிக்க எந்த தேவைப்பாடும் இல்லை அவசரகால சட்டத்தை நீடிக்க பிரதி அமைச்சர் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியினர் அனைத்து சந்தர்ப்பத்திலும் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தனர்.

ஆனால் தற்போது அவர்களின் கதை எரிபொருள் வரிசையை கட்டுப்படுத்தவும் போதைப்பொருள் வியாபாரத்தையும் ஒழிக்கவும் இந்த சட்டம் அவசியம் என்பதைப் போன்றுள்ளது.

மக்களின் கோரிக்கையை ஒடுக்கும் நோக்கிலேயே இந்த சட்டத்தை நீடித்துள்ளதாகவே தோன்றுகின்றது. மக்கள் சேவைக்கு அவசரகாலச் சட்டம் அவசியமில்லை-என்றார். (அ)

## எதிர்வரவுள்ள...

உரையாற்றிய பிரதி அமைச்சர், மத்திய கிழக்கு மோதல்களினால் எதிர்காலத்தில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய மோதலின் விளைவாக கடல் மற்றும் விமானப் போக்குவரத்து பாதைகளில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே இந்த சாத்தியமான இடையூறுகளுக்குக் காரணம்.

மேலும், இந்த உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் அத்தியாவசிய சேவைகளை தடையின்றி வழங்குவதை உறுதி செய்வதற்காக தற்போதைய அவசரகால நிலையை நீடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அவசரகால...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் மிகுந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இருப்பினும் நாட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கிலேயே நாம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படவேண்டும்.

தேசிய பாதுகாப்பு பாதிக்கப்பட்ட, வங்குரோத்து அடைந்த , நாட்டு மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி அடைந்த நாட்டையே பொறுப்பேற்கவேண்டியிருந்தது.

அதேபோன்று டித்வா சூறாவளி தாக்கம் , மற்றும் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையால் எம்முடைய நாட்டுக்கு ஏற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்தி நாட்டு மக்களை முன்னோக்கிய பாதைக்கு இட்டுச்செல்லும் நோக்கிலேயே நாம் அவசரகாலச் சட்டத்தை நீடித்துள்ளோம்.

ஆகவே இந்த விடயம் பொருத்தமானதாக அமையும் - என்றார். (அ)

## காங்கேசன்துறை...

பிற்பகல் 2.00 மணியளவில், காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

அதன் பின்னர், காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து 92 பயணிகளுடன், 3.00 மணிக்கு, நாகப்பட்டினம் நோக்கிய பயணத்தை மேற்கொண்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி, பருவகால மழை மற்றும் கப்பல் பராமரிப்பு பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த கப்பல் சேவை, மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய 6 நாட்களும் சேவை இடம்பெறுவதுடன், இருவழிக் கட்டணமாக, இலங்கை ரூபாவில் 28 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படுகின்றது. (அ)

## மத்திய...

நாம் ஒரு பக்கம் மாத்திரம் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

நாம் ஒரு போரில் ஈடுபடவில்லை, எனவே நாம் ஒரு அணியினருக்கு ஆதரவு வழங்க வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு பக்க முடிவை எடுத்தால் பாதிப்பு ஏற்படுமா இல்லையா என கூற முடியாது ஆனால் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஏனெனில் நாம் எவருக்கும் சார்பாக இருக்கக் கூடாது. எமது துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்கு நாம் இடமளித்தால், ஏதோ ஒரு பக்கத்திலிருந்து நமக்கு அடி விழத்தான் செய்யும்-என்றார். (அ)

## எரிபொருள்...

செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவனனான ரமேஷ்நாதன் கருவூலன் என்பவரே இந்தத் தொழில்நுட்பச் செயலியை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அண்மைக்காலமாக ஏற்பட்ட எரிபொருள் வரிசை நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய செயலி தொடர்பில், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனுக்கு நேற்று விசேட விளக்கமளிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவிய எரிபொருள் விநியோகச் சவால்களுக்குத் தொழில்நுட்ப ரீதியான தீர்வுகாண்பது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறனிடம் விசேட கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு அமைவாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனான ரமேஷ்நாதன் கருவூலன் இந்தத் தொழில்நுட்பச் செயலியை வெற்றிகரமாக உருவாக்கி அது தொடர்பாக ஆளுநர் உட்பட்ட அதிகாரிகளுக்கு நேற்றுச் செயன்முறை விளக்கமளித்தார்.

இந்தச் செயன்முறை விளக்கத்தின் போது, புதிய செயலியின் தொழிற்பாடு மற்றும் பயன்பாடுகள் தொடர்பிலான விரிவான முன்னளிக்கையை குறித்த மாணவன் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்குச் செய்துகாட்டினார்.

இதனைத் தொடர்ந்து, இச்செயலியைப் பொது மக்கள் பாவனைக்கு ஏற்றவாறு மேலும் எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இனிவரும் காலங்களில், ஏதாவது ஒரு சில பிரதேசங்களில் மாத்திரம் எரிபொருளுக்கான வரிசை நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில், எரிபொருள் விநியோகத்தை மிகவும் நேர்த்தியாகவும் மக்கள் எவ்வித சிரமங்களுமின்றியும் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இந்தச் செயலியைப் பயன்படுத்த முடியும் என இதன் போது தெரிவிக்கப்பட்டது.

மிகக் குறுகிய காலத்துக்குள் இத்தகையதொரு தொழில்நுட்பத் தீர்வை வெற்றிகரமாக உருவாக்கிய மாணவனின் ஆக்கபூர்வமான முயற்சிக்கும், அதனை முழுமையாக ஊக்குவித்த கல்லூரி அதிபருக்கும் ஆளுநர் தனது விசேட பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும், இந்தச் செயலியின் பயன்பாடு மற்றும் முன்னெடுப்புக்கள் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநரால் உத்தியோகபூர்வ கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயன்முறை விளக்கத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் மற்றும் செயலியை உருவாக்கிய மாணவன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஒ)

## அடக்குமுறை...

அடக்குமுறை என்பது என்ன? “அடக்குமுறை, அடக்குமுறை” என்று வெறுமனே கூறிக்கொண்டிருக்காது, உண்மையில் அடக்குமுறை இடம்பெற்ற சம்பவங்களை எங்களிடம் முன்வையுங்கள்.

இந்த மூன்று மாத காலத்திற்குள் அந்தச் சம்பவங்கள் எங்கே நடந்தன? யாராவது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்களா? இந்த விதிமுறைகளின் கீழ் யாரேனும் கைது செய்யப்பட்டார்களா? அவற்றை எங்களிடம் முன்வையுங்கள்.

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடக்குமுறை கையாளப்படுகின்றது எனவும் ஜனநாயகத்திற்கு சவால் விடுக்கப்படுகிறது என்றும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய நாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தோம். அந்தச் சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்டத்தின் மூலம் அடக்குமுறைகள் திட்டவட்டமாக நடந்தபோதுதான் நாம் அதை எதிர்த்தோம். அதற்கான உதாரணங்கள் எங்களிடம் இருந்தன, சாட்சிகள் இருந்தன, சம்பவங்களை எங்களால் விவரிக்க முடிந்தது. அதன் அடிப்படையில் தான் நாம் எதிர்த்தோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஹோர்முஸ் நீரிணை மூடல் இலங்கைக்கும் நெருக்கடி!!

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயரும் அபாயம்

கொழும்பு, மார்ச் 07

இஸ்ரேல்-அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான மோதல் நிலைமையினைத் தொடர்ந்து, ஈரானிய அதிகாரிகளால் ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளமையினால் உலகளாவிய கப்பல் போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இதன் நேரடித் தாக்கத்தினால் இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் துறைகளும் பாரிய சவால்களை எதிர்நோக்கவுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது-

தற்போது நிலவும் போர்ச் சூழல் காரணமாக காப்புறுதி நிறுவனங்கள் விலைச் செல்வதால் கப்பல் கட்டணங்கள் ஏற்கனவே சிறிதளவு அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அத்துடன் கடல் மார்க்கங்கள் மாற்றப்படுவதால் கப்பல்கள் வருகை தருவதிலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன - என்றார்.

முறையான காப்புறுதி பாதுகாப்பு இன்றி வர்த்தகக் கப்பல்கள் பயணிக்க முடியாது என்பதுடன், துறைமுக அதிகார சபைகள் மற்றும் வங்கிகளும் அத்தகைய காப்புறுதியை ஒரு கட்டாய நிபந்தனையாகவே கருதுகின்றன.

கடந்த 48 மணிநேரத்தில் போர் இடர் காப்புறுதி பிரீமியக் கட்டணங்கள் கப்பல் பெறுமதியின் 0.2 வீதத்திலிருந்து 1 வீதமாக அதிகரித்துள்ளதாக துறைசார் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த சில வாரங்களில் இலங்கையில் உணவுப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களின் விலைகளில் ஏற்றம் ஏற்படும் என கூறும் பொருளாதார நிபுணர்கள், இதற்கான மாற்று வழி குறித்து இலங்கை சில முடிவுகளை எடுப்பது கட்டாயம் எனவும் கூறுகின்றனர்.

ஹோர்முஸ் நீரிணை ஊடான கப்பல் போக்குவரத்து வழமைக்கு திரும்பும் காலம் குறித்து கணிப்பிட முடியாது. இதனால் இலங்கை உட்பட பல ஆசிய நாடுகள் பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

## சுரேஸ் சாலே கைதுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு!

கொழும்பு, மார்ச். 07

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் - ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாட்டின் தேசிய மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அல்லது அரசியலமைப்புக்கு உட்பட்டு - அரசியலமைப்பின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தைச் சட்டவிரோதமாகக் கவிழ்ப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவளித்தவர்களுக்கு மட்டுமே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஏற்புடையதாகும் என்றும், கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் - ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே அத்தகைய தேசவிரோதச் செயலெதிலும் ஈடுபடவில்லை என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## சாலே கைது குறித்து குடும்பத்தினரும் மனு!

கொழும்பு, மார்ச் 07

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் - ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலேயின் கைது மற்றும் தடுப்புக் காவல் தொடர்பில் அவரது குடும்பத்தினர் சார்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுரேஸ் சாலேயின் மனைவி திருமதி எஸ்.பி.எம்.எஸ்.பி சாலே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஸ் சாலேயைத் தடுப்புக் காவலில் வைத்து குடும்பத்தினர் பார்வையிடுவதற்கும், வீட்டிலிருந்து உணவுப் பொருட்களை வழங்குவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறித்தும், சாலேக்குத் தேவையான சட்ட உதவிகளை ஏற்பாடு செய்வதற்கு வசதியாக வழக்கறிஞர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தல்கள் குறித்தும் தனது ஆழ்ந்த ஆட்சேபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சுரேஸ் சாலேயைத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் சென்று பார்வையிடுவதற்காக அவரது மகன் சமர்ப்பித்திருந்த அனுமதிக் கோரிக்கைக்கு பொலீஸ் தரப்பினால் இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள திருமதி எஸ்.பி.எம்.எஸ்.பி சாலே, வழக்கு குறித்த முறையான விளக்கம், நீதிமன்ற ஆஜர்படுத்தல் திகதிகள் பற்றிய முன்கூட்டிய அறிவிப்பு மற்றும் தனது கணவரின் சட்ட உரிமைகள் மற்றும் நலனோம்பு உத்தரவாதங்களை ஆகியவற்றை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளார். (ஒ)

## மார்ச் 10 ஆம் திகதி முதல் இலங்கையில் தேசிய வாய்வழி சுகாதார கணக்கெடுப்பு

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் மக்களின் வாய்வழி சுகாதார நிலையை மதிப்பிடும் நோக்கில் மார்ச் 10 முதல் ஐந்தாவது தேசிய வாய்வழி சுகாதார கணக்கெடுப்பு ஆரம்பமாகவுள்ளது.

உலக சுகாதார நிறுவன பரிந்துரையின் படி, ஒவ்வொரு 10 ஆண்டுக்கும் ஒருமுறை இந்த கணக்கெடுப்புகள் நடைபெறுகின்றன. இம்முறை 2026 மார்ச் முதல் நவம்பர் வரை நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்கள், முதியோர் மற்றும் பல்வேறு வயதினரிடமிருந்து தரவுகள் திரட்டப்படும்.

இந்த கணக்கெடுப்பு எதிர்கால தேசிய வாய்வழி சுகாதாரக் கொள்கைகளை வடிவமைக்கவும், தடுப்பு திட்டங்களை திட்டமிடவும் தேவையான முக்கிய தகவல்களை வழங்கும்.

பொதுமக்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த, சுகாதார அமைச்சின் பல் மருத்துவ சேவைகள் பிரிவு மற்றும் ஊடகப் பிரிவு இணைந்து விசேட கலந்துரையாடல்களை நடத்த உள்ளனர். (அ)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும்!

கொழும்பு, மார்ச் 07

ஈரான் மோதல் காரணமாக இலங்கையின் பொருளாதார நிலை குறித்து பெர்ஸ்ட் கப்பிற்றல் ஹோல்டிங்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வருடம் இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 5 வீதத்தால் வீழ்ச்சியடைக்கூடும் என கணித்துள்ளது.

இருப்பினும், அதிகரித்து வரும் வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரிப்பு மற்றும் நடப்புக் கணக்கில் ஏற்படும் தாக்கம் காரணமாக, இலங்கை ரூபா ஆரம்பத்தில் கணித்ததை விடவும் அதிகமாக வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழலால் உலகளாவிய முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடுகளை நாடுவதால் அமெரிக்க டொலர் பலமடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் குறியீட்டு விகிதத்தின்படி, இலங்கை ரூபாய் வர்த்தகத்தின் ஆரம்பத்தில் சற்று பலவீனமடைந்த போதிலும், இறுதியில் 309.24 என்ற அளவில் நிலைபெற்றது.

ஏற்றுமதி கேள்வி குறைவடைவது இலங்கையின் வர்த்தக நிலுவையில் மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையின் கோப்பி, தேயிலை மற்றும் வாசனைத் திரவிய ஏற்றுமதியில் சுமார் கால் பகுதி தற்போது அமெரிக்கா, ஈரான், ஈராக் மற்றும் வளைகுடா நாடுகளை இலக்காகக் கொண்டவை.

புவிசார் அரசியல் பதற்றங்களால் தற்போது இந்நாடுகள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன.

எனவே, இந்த முக்கிய ஏற்றுமதித் துறையானது அதிக வெளிவாரி அபாயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

மேலும், கப்பல் போக்குவரத்து மற்றும் காப்புறுதி செலவுகள் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் நிலைமையை மோசமாக்கலாம் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

## ஈரான் வெளியுறவு அமைச்சருடன் விஜித ஹேரத் அவசர உரையாடல்

கொழும்பு, மார்ச் 07

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர் பதற்றம் குறித்து இலங்கை அரசாங்கம் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போது இது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

மோதல்களைத் தவிர்த்து, பிராந்தியத்தில் அமைதியை மீண்டும் நிலைநாட்ட இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவர் இதன்போது வலியுறுத்தினார். (அ)

## ஓமானில் வாழும் இலங்கையர் நலன் குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 07

ஓமானில் வாழும் இலங்கையர்களின் நலன் தொடர்பில் ஓமான் வெளியுறவு அமைச்சர் சையித் பத்ர் அல் புசைதியிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இதன்போது, பிராந்தியத்தில் நிலவிவரும் சூழல் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதுடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் உறுதிப்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் விஜித ஹேரத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"ஓமான் வெளியுறவு அமைச்சர் சையித் பத்ர் அல் புசைதியுடன் உரையாடினேன். இதன்போது, பிராந்தியத்தில் நிலவிவரும் சூழல் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்தினேன்.

ஓமானில் வாழும் இலங்கை சமூகத்தினருக்கு ஓமான் தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவிற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். ஓமானிலுள்ள இலங்கை பிரஜைகளின் நலன் மற்றும் நல்வாழ்விற்காக ஓமான் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என அமைச்சர் அல் புசைதி உறுதியளித்தார்." - என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.